(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியோடு நிற்பது நல்லது. வரலாறுகளையெல்லாம் சொல்லுவது சரியல்ல. வரலாறு தெரிந்தால் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் விட்டுவிட வேண்டும். பாண்டிய மன்னன் சேரனுடைய மகளைத் திருமணம் செய்துகொண்டான். சேரன்மாதேவி பாண்டியனின் மனைவி. பாண்டியனின் மனைவி பெயரால் 'சேரன்மாதேவி' என்று அந்த ஊருக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அது ஒன்றும் தானம் கொடுத்ததல்ல. எனவே அப்படி வரலாற்றுக் குறிப்பைச் சொல்லாமல் இருப்பது நல்லது. (சிரிப்பு).

(ஈ) வட ஆற்காடு மாவட்டம் புதூர்நாடு மருத்துவமனை முறையாகச் செயல்படாமை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜவ்வாது மலை, புதூர்நாடு அரசு மருத்துவமனை முறையாகச் செயல்படாததால் மலைவாழ் மக்கள் சிகிச்சை பெற முடியாத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையிலுள்ள புதூர் நாடு அரசினர் மருந்தகம் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 17—1—1980 முதல் செயல்படுகிறது. இம் மருந்தகத்தில் வெளி நோயாளிகள் சிகிச்சை மட்டுமே அளிக்கப் படுகிறது. இம்மருந்தகத்திற்குக் கீழ்க்காணும் பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது :—

(1) மருத்துவ அலுவலர்;
(2) மருந்தாளுநர்;
(3) துணைச் செவிலியர்;
(4) ஆண் செவிலியர் உதவியாளர்;
(5) பெண் செவிலியர் உதவியாளர்;
(6) துப்புரவுப் பணியாளர்;

அனைத்துப் பணியாளர்களும் பணியிலுள்ளனர். அங்கு சராசரியாக ஒரு நாளைக்கு 20 வெளிநோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். படுக்கை வசதியின்மையால் உள் நோயாளி சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. மாதத்தில் சராசரியாக 15 முதல் 20 வரை சாதாரண சிறு அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இம்மருந்தகத்தில் தேவைப்படும் மருந்துகள் போதிய அளவு இருப்பிலுள்ளது. எனவே இம்மருந்தகம் நன்றாகச் செயல்படுகிறது.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கையிலே உள்ள தகவல் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. அங்கே தினசரி சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. மருத்துவர்கள் வாரம் ஒரு முறைகூட வருவது கடினமாக இருக்கிறது. அவர் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருப்பத்தூரில் தங்குகிறார். அங்கே இருக்கின்ற டாக்டர்கள் தங்கும் குவாட்டர்ஸ் போதிய அடிப்படை வசதி இல்லாததால் அங்கே மருத்துவர் தங்கவில்லை. அது தவிர எமர்ஜன்சி கேஸ்களைப் பார்ப்பதில்லை. இந்தத் தகவல்களை எல்லாம் தராமல், துறையினர் தவறான தகவல்களை மாண்புமிகு அமைச்சருக்குக் கொடுத்துள்ளார்களா? இது குறித்து அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மருத்துவர் அங்கு தங்கவில்லை என்று சொன்னால் அது தவறாகும். அது குறித்து கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே தவறான தகவல்களைக் கொடுக்கவில்லை. யார் யார் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கே தங்கித்தான் பணியாற்ற வேண்டுமென்று அரசு கட்டாயம் வலியுறுத்தும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் புகார் கொடுத்தால் நிச்சயம் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, போதிய அளவுக்கு மருந்துகள் இருக்கிறதென்று குறிப்பிட்டுள்ளதும் உண்மைக்கு மாறாக இருக்கிறது. அங்கே காலி டப்பாக்களைத்தான் பார்க்கிறோம். நோயாளிகள் மருந்து இல்லாமல் திரும்பி விடுகின்றனர். அது குறித்து அரசு சரியான முறையில் நடவடிக்கை எடுக்குமா? இந்த நிலை நீடிக்கும் பட்சத்தில் மலைவாழ் மக்களுக்காக நானே முன் நின்று

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 8

போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். நான் முன்னமேயே அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டதுபோல 1986 ஆம் ஆண்டு இந்த மருத்துவமனை கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு உத்தரவு வெளியிடப்பட்டது. அதுவும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் பல முறை இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். மருந்து இல்லை என்று எந்த மருத்துவமனையிலும் குறையில்லாத அளவுக்கு அரசாங்கம் ஏராளமாக மருந்துகளை வாங்கிக் கொடுத்திருக்கிறது. அங்கே மருந்து இல்லை என்றால், அது உண்மையானால், இப்போதே அதிகாரிகளை அனுப்பி அதை விசாரிக்கச் சொல்கிறேன். மருந்து இல்லாமல் இருக்க முடியாது. மருந்துகள் இல்லாமற் போனால், இருக்கிறவர்கள் அதைத் தவறான முறையில் பயன்படுத்தி இருக்க வேண்டும். மருத்துவர்கள், டாக்டர்கள் வருவதில்லை என்று சொன்னார்கள். இப்போது மருந்து இல்லை என்று சொல்கிறார்கள். இதை அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும். அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமென்று உறுதி அளிக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் போராட வேண்டிய அவசியம் இராது. இதைப் பாராட்டும் காலம் சீக்கியம் வரும்.

(உ) காமராஜ் மாவட்டத்தில் நிலங்களின் மதிப்பீட்டை உயர்த்தியிருப்பதால் பத்திரப் பதிவு பாதிப்பு.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜ் மாவட்டத்தில் நிலங்களின் மதிப்பீட்டைப் பல மடங்கு கூட்டியிருப்பதால், ஒரு வாரமாக மாவட்டம் முழுவதும் பத்திரப் பதிவு நடைபெறாமல் இருப்பதும், இது குறித்து மக்களின் அதிருப்தி பற்றியும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.